சுருக்கம்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – விற்பனைக்குழுக்கள் – 2017–ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 08/2017)–படி விற்பனைக்குழுக்களின் தனி அலுவலர்கள் பதவி காலத்தினை 31.05.2015 முதல் 30.05.2017 வரையிலான இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை[வே.வி.2(1)] துறை

அரசாணை (நிலை) எண்.68 நாள்: 07.03.2017

திருவள்ளுவர் ஆண்டு 2048,
மாசித் திங்கள் 23–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.87, வேளாண்மை (வேவி2) துறை, நாள்.31.5.2011.
2. அரசாணை(நிலை) எண்.100, வேளாண்மை (வேவி2) துறை, நாள்.31.5.2012.
3. அரசாணை(நிலை) எண்.113, வேளாண்மை (வேவி2) துறை, நாள்.31.5.2013.
4. அரசாணை(நிலை) எண்.200, வேளாண்மை (வேவி2) துறை, நாள்.10.12.2014.
5. 2017 ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் ( தமிழ்நாடு சட்டம் 08/2017) வெளியிடப்பட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.36, நாள் 17.02.2017.
6. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடிதம் எண். விகுதி 7/34378/2014, நாள் 14.02.2017, 23.2.2017.

-----

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 21 விற்பனைக்குழு உறுப்பினர்களை 1987 –ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டம், சட்டப்பிரிவு 10(3)–ன் கீழ் திரும்ப அழைத்தும் சட்டப் பிரிவு 33(1) (a) மற்றும் (2)–ன்படி, 31.05.2011 முதல் 30.05.2012 வரை ஓராண்டு காலத்திற்கு வேளாண்மை துணை இயக்குநர்களை (வேளாண் வணிகம்) விற்பனைக்குழுக்களின் தனி அலுவலர்களாக நியமித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டு, மூன்று மற்றும் நான்கில் படிக்கப்பட்ட அரசாணைகளில், மேற்படி தனி அலுவலர்களின் பதவிக் காலத்தினை முறையே 31.05.2012 முதல் 30.05.2013 வரையிலும், 31.05.2013 முதல் 30.05.2014 வரையிலும், மற்றும் 31.05.2014 முதல் 30.05.2015 வரையிலும் முறையே நீட்டித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில், விற்பனைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவி காலத்தினை 30.05.2015–க்கு அப்பால் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்வதற்கு ஏதுவாக, 1987 ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் உள்ள சட்டப்பிரிவு 33 உட்பிரிவு (1)–ன் வரம்புரையில் உள்ள "நான்கு ஆண்டுகளுக்கு" என்பதற்கு பதிலாக "ஆறு ஆண்டுகள்" என திருத்தம் செய்து 2017 ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை முறைப்படுத்துதல் திருத்தச் சட்டம் ( தமிழ்நாடு சட்டம் 08/2017) வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இத்திருத்தச் சட்டத்தின்படி 31.05.2015 தேதி முதல் துவங்கி, இந்தச்சட்டம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் தேதிவரை விற்பனைக்குழுக்களின் தனி அலுவலர்களால் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செல்லுந்தன்மையுடன் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், மேலே ஆறில் படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வணிக ஆணையரின் கடிதத்தில், தனி அலுவலர்களின் பதவிக்காலம் 30.5.2015–ம் தேதியுடன் முடிவடைந்ததால், 1987 ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டம், சட்டப்பிரிவு 33 உட்பிரிவு (1)–ன் வரம்புரைக்கு உரிய திருத்தம் வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தற்போது தமிழகத்தில் இயங்கிவரும் 22 விற்பனைக்குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை 30.05.2017 வரை நீட்டிப்பு செய்தும், 31.05.2015 முதல் நாளது தேதி வரை விற்பனைக்குழுக்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயல்பாடுகளையும் அங்கீகரித்து அவை அனைத்தும் செல்லத்தக்கவை என்றும் ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்காணும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று 2017 ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 08/2017)–படி, தற்போது உள்ள 23 விற்பனைக்குழுக்களில் 22 விற்பனைக்குழுக்களில் பணிபுரிந்து வரும் இணைப்பில் கண்டுள்ள விற்பனைக்குழு தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை 31.05.2015 முதல் 30.05.2017 வரையிலான இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்தும், 31.05.2015 முதல் விற்பனைக்குழுக்களின் தனி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயல்பாடுகளையும் அங்கீகரித்து அவை அனைத்தும் செல்லத்தக்கவை என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை–32.
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை–32.

வேளாண்மை இயக்குநர், சென்னை–5

அனைத்து விற்பனைக்குழு செயலாளர்கள்/ அனைத்து விற்பனைக்குழு தனி அலுவலர்கள் (வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை–32 மூலமாக)

முதன்மை மாநில கணக்காயர் (G & SSA), சென்னை–18.

முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA), சென்னை–18.

மாநிலக் கணக்காயர், சென்னை–18 (பெயரில்)

சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.

உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப் பிரிவு தணிக்கை) அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை –9.

<u>நகல்</u>

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.

வேளாண்மை (அநமு3) துறை, சென்னை–9.(அட்டவணைப்படுத்தும் வகைக்கு)

வேளாண்மை (வேவி1/வேவி3) துறை, சென்னை–9.

இருப்புக்கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

த. சண்முகம் 8/3/17

பிரிவு அலுவலர்.

8.3.17

இணைப்பு

(அரசாணை (நிலை) எண்.68 , வேளாண்மை (வேவி.2) துறை, நாள். 07.03.2017)

| வ.எண் | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) விவரம் | தனி அலுவலர் விவரம் |
|---|---|---|
| 1. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), காஞ்சிபுரம் | தனி அலுவலர், காஞ்சிபுரம் விற்பனைக்குழு |
| 2. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), வேலூர் | தனி அலுவலர், வேலூர் விற்பனைக்குழு |
| 3. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), திருவண்ணாமலை | தனி அலுவலர், திருவண்ணாமலை விற்பனைக்குழு |
| 4. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), கடலூர் | தனி அலுவலர், கடலூர் விற்பனைக்குழு |
| 5. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), விழுப்புரம் | தனி அலுவலர், விழுப்புரம் விற்பனைக்குழு |
| 6. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), சேலம் | தனி அலுவலர், சேலம் விற்பனைக்குழு |
| 7. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), தர்மபுரி | தனி அலுவலர், தர்மபுரி விற்பனைக்குழு |
| 8. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), கோயம்புத்தூர் | தனி அலுவலர், கோயம்புத்தூர் விற்பனைக்குழு |
| 9. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), ஈரோடு | தனி அலுவலர், ஈரோடு விற்பனைக்குழு |
| 10. | | தனி அலுவலர் (கூ.பொ), திருப்பூர் விற்பனைக்குழு |
| 11. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), திருச்சிராப்பள்ளி | தனி அலுவலர், திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு |
| 12. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), தஞ்சாவூர் | தனி அலுவலர், தஞ்சாவூர் விற்பனைக்குழு |
| 13. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), புதுக்கோட்டை | தனி அலுவலர், புதுக்கோட்டை விற்பனைக்குழு |
| 14. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), மதுரை | தனி அலுவலர், மதுரை விற்பனைக்குழு |

| | | |
|---|---|---|
| 15. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), விருதுநகர் | தனி அலுவலர், இராமநாதபுரம் விற்பனைக்குழு, இருப்பு விருதுநகர் |
| 16. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), திருநெல்வேலி | தனி அலுவலர், திருநெல்வேலி விற்பனைக்குழு |
| 17. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), கன்னியாகுமரி | தனி அலுவலர், கன்னியாகுமரி விற்பனைக்குழு, இருப்பு நாகர்கோவில் |
| 18. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), திருவாரூர் | தனி அலுவலர், திருவாரூர் விற்பனைக்குழு |
| 19. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), நாகப்பட்டினம் | தனி அலுவலர், நாகப்பட்டினம் விற்பனைக்குழு |
| 20. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), தேனி | தனி அலுவலர், தேனி விற்பனைக்குழு |
| 21. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), திண்டுக்கல் | தனி அலுவலர், திண்டுக்கல் விற்பனைக்குழு |
| 22. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), நீலகிரி | தனி அலுவலர், நீலகிரி விற்பனைக்குழு |

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர் 8/3/17
8.3.17